ஜனவரி 2022-ஆம் மாதத்திற்கான சம்பளம் வழங்கும் அதிகாரம் (Pay authorization for the month of January 2022)

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை – 600 009.

**கடித எண். 1139 /பக5(1)/2022 - 1, நாள் 29 .01.2022**

அனுப்புநர்
திருமதி. காகர்லா உஷா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /
சார் கருவூல அலுவலர்கள். (இணைப்பு)
சம்பளக் கணக்கு அலுவலர் சென்னை – 01 / 08 / 35. (இணைப்பு)
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள். (இணைப்பு)

ஐயா,

பொருள்: பள்ளிக் கல்வி - 2013-14ஆம் கல்வியாண்டில் 100 அரசு/ நகராட்சி/ மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டது – இப்பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட 900 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் தற்காலிகப் பணியிடங்களுக்கு ஜனவரி 2022-ஆம் மாதத்திற்கான ஊதிய கொடுப்பாணை வழங்குதல் – குறித்து.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.110, பள்ளிக் கல்வித்[ப.க2(2)] துறை, நாள் 02.07.2013
2. அரசாணை (1D) எண்.557, பள்ளிக் கல்வித் [பக5(1)] துறை, நாள் 09.08.2018.
3, பள்ளிக் கல்வி ஆணையரின் கடித ந.க. எண். 31511/ எல்/ இ3/ 2021, நாள் 12.01.2022.

******

பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் 2013-14ஆம் கல்வியாண்டில் 100 அரசு/மாநகராட்சி / நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்திட அனுமதி வழங்கியும் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் உயர்நிலைப் பள்ளி ஒவ்வொன்றிலும் ரூ.9300-34800 + தர ஊதியம் ரூ.4800/- என்ற ஊதிய விகிதத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடத்தை ரூ.15600-39100 + தர ஊதியம் ரூ.5700/- என்ற ஊதிய விகிதத்தில் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடமாக நிலை (upgraded) உயர்த்திட ஒப்பளிப்பு வழங்கியும், நிலை உயர்த்தப்பட்ட 100 மேல்நிலைப் பள்ளிகளுக்கு, பள்ளி ஒவ்வொன்றிற்கும் தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வரலாறு, பொருளியல் மற்றும் வணிகவியல் என 9 பாடங்களுக்கென ரூ.9300-34800+ தர ஊதியம் ரூ.4800/- என்ற ஊதிய விகிதத்தில்

9 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 900 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் அவை நிரப்பப்படும் நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்கு தற்காலிகமாக ஒப்பளிப்பு செய்தும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

2. பார்வை 2ல் காணும் அரசாணையில் மேற்காணும் பணியிடங்களில் 900 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு கடைசியாக 02.07.2018 முதல் 30.06.2021 வரை மூன்றாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.

3. மேற்காணும் தற்காலிக பணியிடங்களில் 900 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு 01.07.2021 முதல் 30.06.2024 வரை மேலும் மூன்றாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்க பள்ளிக் கல்வி ஆணையர் அரசிற்கு கருத்துரு அனுப்பியுள்ளார். மேலும், இப்பணியிடங்களுக்கு ஜனவரி 2022-ஆம் மாதத்திற்கு ஊதியம் பெறத்தக்க வகையில் ஊதியம் வழங்க ஊதிய கொடுப்பாணையினை (Pay Authorization) வழங்குமாறு பள்ளிக்கல்வி ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேற்குறிப்பிட்டுள்ள 900 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் தற்காலிகப் பணியிடங்களுக்கு 01.07.2021 முதல் 30.06.2024 வரை மேலும் மூன்றாண்டிற்கு தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த பள்ளிக் கல்வி ஆணையரின் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்நிலையில், இக்கடிதத்தின் இணைப்பில் கண்டுள்ள பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வரலாறு, பொருளியல் மற்றும் வணிகவியல் என 9 பாடங்களுக்கென 900 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு ஜனவரி -2022 ஆம் மாதத்திற்கான ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்கப்படுகிறது. மேற்படி அலுவலர்களுக்கான ஜனவரி 2022--ஆம் மாதத்திற்கான சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக்கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. இக்கடிதம் நிதித்துறையின் அ.சா.கு.எண்.3674/கல்வி-II/2022, நாள் 28.01.2022-ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள

29/1/2022

(அரசு சார்புச் செயலாளர்)

அரசு முதன்மைச் செயலாளருக்காக

**நகல்**

29/01/2022

பள்ளிக்கல்வி ஆணையர், சென்னை-6. (இணைப்பு)

மாநிலக் கணக்காயர், சென்னை-18. (இணைப்பு)

நிதி(கல்வி-II)துறை, சென்னை-9.

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

ந.க.எண்.31511/எம்/இ3/2021 நாள்: 29.01.2022

(நகல்) தகவலுக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பப்படுகிறது. 29.1.22

இணை இயக்குநர் (நா.ந.தி.),
பள்ளிக் கல்வி ஆணையரகம்,
சென்னை-600 006.

பெறுநர்: அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்